**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO. 54/2017**

| | |
|---|---|
| Name: முருகன் | Caste: |
| Father Name: வரதன்<br>Husband Name : | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tmt.L.MeeraBai, Gr.III, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 24.04.2026 | |

**24.04.2026**

**விசாரணை தொடங்கிய நேரம் 11.30 AM**

**பி.வா.சா. 2. – வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியமா என்றால் தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு படித்து ITI முடித்துள்ளேன். என்ன பரிகாரம் வேண்டி வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு சொந்தமான இடத்தில் வழக்கான தடையுத்தரவு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். எவ்வளவு விஸ்திரணத்திற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் 2 ஏக்கர் 59 செண்டாகும். இந்த வழக்கில் பதிலுரையின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் எங்கள் சார்பாக என்னுடைய அண்ணன் பழனி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து எனக்கு எந்த வகையில் உரிமை கோருகிறேன் என்றால் என்னுடைய தந்தையின் பாட்டனார் கன்னிகவுண்டர் கிரையம் பெற்ற சொத்தாகும். கன்னிகவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் பரசுராமன். சந்தியப்பன், ஏழுமலை, நாகம்மாள் ஆவார்கள். பரசுராமனின் வாரிசுகள் யார் என்றால் வரதன், தேனம்மாள், குட்டியம்மாள், குட்டாறு, முனுசாமி, சகாதேவன் ஆகியோர். எனது தந்தை தான் வரதன் ஆவார். எங்களுக்கு சொந்தம் என சொல்லும் 72 செண்ட் இடம் யார் பெயரில் உள்ளது என்றால் என்னுடைய தந்தை வரதன் பெயரில் உள்ளது. என் தகப்பனார் வரதன் பெயரில் எவ்வாறு அந்த சொத்து உள்ளது என்றால் என்னுடைய தகப்பனார் வரதன், சந்தியப்பன் மற்றும் ஏழுமலை ஆகியோர் வாய்மொழியாக பாகம்பிரித்து கொண்டதன் பேரில் எனது தந்தை பெயரில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் யார் யாருக்கு இடையே மேற்படி வாய்மொழி பாகப்பிரிவிணை ஏற்பட்டது என

குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. என்னுடைய அண்ணன் தாக்கல் செய்த பதிலுரையில் அந்த விவரத்தை குறிப்பிட்டுள்ளரா என்றால் எனக்கு தெரியாது.

எந்த ஆண்டு என தந்தை பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. என்னென்ன ஆவணங்கள் பரிசிலித்து அந்த பட்டா வழங்கப்பட்டது என்றால் அந்த விவரமும் எனக்கு தெரியாது. என்னுடைய தந்தை பெயரில் பட்டா உள்ளது என்ற விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் எனக்கு சுமார் 10 வயது இருக்கும் போது தெரியும். எனக்கு தற்போது 44 வயதாகும்.

எத்தனை அட்டவணைகளாக வழக்கு சொத்தினை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 5 அட்டவணைகளாக தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்திற்கு வடக்கு, கிழக்கு மேற்கு பக்கங்களில் விவசாய நிலம் என்றால் சரிதான். தெற்கு பக்கத்தில் ரோடு உள்ளது. எங்களக்கு சொந்தமான சொத்து கன்னிகவுண்டர் பெயரில் இருந்து பரசுராமனுக்கு வந்து அவர் மூலமாக என்னுடைய தந்தை வரதன் பெயரில் உள்ளதா அல்லது கன்னிகவுண்டர் பெயில் இருந்து நேரடியாக என்னுடைய தந்தை பெருக்கு கிடைத்துள்ளதா என்றால் நேரடியாக கன்னிகவுண்டர் பெயரில் இருந்து என்னுடைய தந்தை வரதன் பெயரில் சொத்து கிடைக்கப்பெற்றது என்று என்னுடைய தந்தை என்னிடம் தெரிவித்து இருக்கிறார். மேற்படி விவரங்கள் நான் தாக்கல் செய்த பதிலுரையிலோ அல்லது பிரமாணவாக்குமூலத்திலோ உள்ளதா என்றால் இல்லை. வரதன் எந்த ஆண்டு காலமானார் என்றால் 2012 ல் காலமானார். அவரது இறப்பிற்கு பின்பு அவரது சொத்துக்களை பெயர் மாற்றம் செய்ய அவரது வாரிசுகளாகிய நானும் என்னுடன் பிறந்தவர்களோ மனு ஏதேனும் செய்தோமா என்றால் இல்லை. 1–13 பிரதிவாதிகள் எங்களுக்கு சொந்தமான சொத்தினை அனுபவித்து வருவது குறித்து ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தந்தையின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 1975 பட்டாவில் எங்களுக்கு சொந்தமான 78 செண்ட் உள்ளதா என்றால் பட்டா எண் எனக்கு ஞாபகம் இல்லை. 24 செண்ட் மட்டுமே எனது தந்தைக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்தது என எனக்கு தெரியும். மீதமுள்ள விஸ்திரணம் என்னுடைய சித்தப்பாக்களுக்கு சொந்தம். என்னுடைய சித்தப்பாவின் பெயர் முனுசாமி,

சகாதேவன். எங்களுக்கு சொந்தமான 24 செண்ட்டிற்கு செல்வதற்கு தனிநபர் கழனியின் வழியாக தான் செல்லவேண்டும் என்றால் சரிதான்.

நான் சொல்வதுபோல் என்னுடைய தந்தை, சந்தியப்பன், ஏழுமலை ஆகியோர்களுக்கு இடையே எந்தவித பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பட்டா எண்.981 தவிர்த்து என்னுடைய தந்தை சொத்தினை அனுபவித்தற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் என்னுடைய தந்தைக்கு மட்டும் நாங்கள் உரிமை கோரும் சொத்துக்கள் உரிமை கிடையாது என்றாலும் பாரசுராமனின் வாரிசுகளுக்கு உரிமை உண்டு என்றாலும் சரியல்ல.

வாதிகள் எங்களிடம் விலைக்கு எந்த சொத்தும் கோரவில்லை என்றால் சரிதான். வாதிகள் விலைக்கு எங்களிடம் சொத்து கோரியதாக என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் தவறுதான். வாதிகளுக்கு உத்திரமேரூர் செங்கல்பட்டு சாலையில் இருந்து எங்கள் நிலத்தின் வழியாக தாவா சொத்தின் கிழக்கு பக்கமாக வடக்கு தெற்கு செல்ல உரிமை உண்டு என்றால் சரியல்ல. தாவாப்படி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 11.55 AM**

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**